**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி - 2019**
-----------------------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் (''கல்லூரி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கல்லூரியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் என்பன தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக்

காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கல்லூரி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கல்லூரியின்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பிரிவு 40(1) | கல்லூரியின் ஆளுகை குழு ஒரு உள்ளக கணக்காய்வாளரை நியமிக்காதிருந்ததுடன் மேலும் 2014 ஆம் ஆண்டு முதல் ஒரு உள்ளக கணக்காய்வு பிரிவினையும் உருவாக்கியிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | கணக்காய்வு சட்டத்துடன் இணங்குதல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க இறைவரிச் சட்டம். பிரிவு 05 | ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலில் பணிபுரியும் ஊழியர் விடயத்தில் தொழிலிருந்தான வழக்கமான இலாபம் முதன்மை ஊழியரைக்காட்டிலும் ஏனைய தொழில் வழங்குனர்களினால் செலுத்தப்பட வேண்டும். உழைக்கும் போதான வரி இரண்டாவது தொழில் வழங்குனரால் 10 சதவீதம் கழிக்க வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் அல்லது சலுகைகளின் மொத்தமாக ரூபா 50,000 விட அதிகரிக்கப்படாததுடன் மற்றும் ஒரு மாதத்திற்கு ரூபா 50,000 விட அத்தகைய கொடுப்பனவுகள் அதிகரிக்கும் போது 20 சதவீதமாக இருத்தல் வேண்டும். எப்படியாயினும் வருகை விரிவுரையாளர்களினுடைய சம்பளத்திலிருந்து கல்லூரியினால் உழைக்கும் போதான வரிகழிக்கப்பட்டிருக்கவில்லை. | வருகை விரிவுரையாளர்களினுடைய உழைக்கும் போதான வரி கழிப்பனவு கட்டணத்தின் சதவீதம் வருகை விரிவுரையாளர்களால் வரவு வைக்கப்பட வேண்டும். | சட்டத்துடன் இணங்கப்பட வேண்டும் |
| **(இ)** | 2006 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க முத்திரை வரிச்சட்டம் (விசேட ஏற்பாடு) | 25,000 ரூபாக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கு முத்திரை வரிக்கட்டணம் கழிக்கப்பட வேண்டும். சட்டத்தில் கூறப்பட்டவாறு இது கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படவில்லை. | முகாமைத்துவ கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்துடன் இணங்கப்பட வேண்டும் |
| **(ஈ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை** 09 அத்தியாயத்தின் 02 ஆம் பிரிவு | ஒரு பொதுக்கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் நிறுவனம் அல்லது தனியார் நிறுவனங்களுக்காகஇ ஏதாவது வேலை செய்வதற்கு அரச ஊழியர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தால் திரட்டு நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டிய கட்டணத்தின் சத வீதத்தினை செயலாளரின் | முகாமைத்துவ கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் தேவைப்பாடுடன் இணங்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆலோசனைக்கு ஏற்ப தீர்மானிக்க வேண்டும். எவ்வாறாயினும் கல்லூரியானது வருகை விரிவுரையாளர்களினுடைய நியமனக்கடிதங்களின் பிரதிகள் அந்த அலுவலர்களினுடைய பணிக்கமர்த்தப்பட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பியிருந்திருக்க அல்லது அறிவித்திருந்திருக்கவில்லை. இதற்கு இணங்க செயலாளர் திரட்டு நிதியில் வரவு வைக்க வேண்டிய தொகையினை தீர்மானிக்க முடியாதிருந்தது. | | |
| **(உ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்** | | | |
| **(i)** | நிதி ஒழுங்கு விதி 110 | இழப்புக்கள் மற்றும் சேதங்களின் பதிவேடு நிதி ஒழுங்கு விதியில் குறிப்பிட்டவாறு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 மார்ச்சிலிருந்து நட்டம் மற்றும் இழப்பீட்டுக்கான பதிவேடு பேணப்படுகின்றது. | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்கவும். |
| (ii) | நிதி ஒழுங்கு விதி 267 | சம்பளம் ரூபா 112,897 ஊழியர்களிடம் இருந்து பற்றுச்சீட்டு பெறப்படாது இரு தடவைகள் அவர்களுக்கு செலுத்தப்பட்டது. | முகாமைத்துவ கருத்துக்கள் இன்றுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்கவும். |
| (iii) | நிதி ஒழுங்கு விதி 756 | ஆண்டு காலப்பகுதியில் வருடாந்த சுற்றாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2020 பெப்ரவரி 26 இல் குழு நியமிக்கப்பட்டது. | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்கவும். |
| (iv) | நிதி ஒழுங்கு விதி 757(2)(அ) | முன்னைய ஆண்டுகளிற்கான சுற்றாய்வு அறிக்கை மீதான பொருத்தமான நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்கவும். |
| **(ஊ)** | **சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணணிகள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துகள் பதிவேடு நிரந்தரமாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துபதிவேடுபராமரிக்கப்படுகின்றது. | நிலையான சொத்துகள் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டியது அவசியம் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2003 யூன் 02 திகதிய பிஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | 4.2.2 ஆம் அத்தியாயம் | சிரேஸ்ட முகாமையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளுக்கான பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை அடையப்பட்டதை உறுதிப்படுத்துவதையும் அடிக்கடி இடைவேளைகளில் கண்ககணிக்கப்பட்டிருக்க வேண்டியது அவசியமான போதிலும் அந்த நோக்கத்திற்காக மாதாந்த சபைக்கூட்டங்களின் பின்வரும் கூற்றுக்கள் முகாமையினால் அட்டவணைபடுத்த முடியாமலிருந்தது.<br><br>(i) பௌதீகரீதியான மற்றும் நிதிரீதியான செயற்திறன் அறிக்கை.<br>(ii) மாதத்திற்கான செயற்பாட்டு அறிக்கை.<br>(iii) மாதத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று.<br>(iv) கடன் பெறுகை மற்றும் பணப்புழக்க நிலை.<br>(v) மாதத்தில் குறிப்பாக கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பெறுமதியான மூலப்பொருளுடைய பெறுகை.<br>(vi) புதிய சேர்ப்பு,பதவியணி நிலை உள்ளடக்கிய மனித வளக் கூற்று போன்றன தேவைப்படுகின்ற. | செயற்திறன் அறிக்கைபோன்றன பராமரிக்கப்படுகின்றத. | செயற்பாட்டு அறிக்கையொன்றை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நேரத்திற்கு சமர்ப்பித்தல் அவசியமாகும். |
| | 4.2.5 ஆம் அத்தியாயம் | தொழிற்படு மூலதனத்தினுடைய வினைத்திறனான முகாமைக்கான ஒரு முறைமையினை சபை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. மேலும் மாதாந்த கூட்டங்களில் இயக்குனர் சபையினால் இருப்பினுடைய | பதவி ஆளணிகள் மற்றும் புதிய ஆட்சேர்ப்பு போன்றன மனித வளங்களின் கூற்றுக்களில் உள்ளடங்குகிறது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதுடன் இணங்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | காலப் பகுப்பாய்வுக்கூற்று ஒன்றினை தயாரித்து மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை என இது அவதானிக்கப்பட்டிருந்தது. | | |
| 4.2.6 ஆம் அத்தியாயம் | மீளாய்வாண்டிற்கான செயற்றிறன் அறிக்கை முகாமைத்துவ சபையினால் பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்யப்படவில்லை. மற்றும் காலாண்டு முடிவடைந்த பின்னர் 30 நாட்கள் கடக்க முன்னர் பொது முயற்சிகள் மற்றும் பொது திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கல்லூரி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவி ஆளணிகள் மற்றும் புதிய ஆட்சேர்ப்பு போன்றன மனித வளங்களின் கூற்றுக்களில் உள்ளடங்குகிறது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதுடன் இணங்கப்பட வேண்டும் |
| 9.2 ஆம் அத்தியாயம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பதவிகளை பெறவேண்டிய அனுமதிகள் இன்றி உதவிப்பதிவாளர், உதவி நிதியாளர் மற்றம் உதவி நூலகர் போன்ற 03 பதவிக்கான அலுவலர்களை கல்லூரி ஆட்சேர்ப்பு செய்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் காலப்பகுதிக்கு அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,715,228 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதிவாளர், நிதியாளர் மற்றம் நூலகர் ஆளணிக்கு மாற்றுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஏற்கனவே விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதுடன் இணங்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கல்லூரியின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 228,417 தொகையான மேலதிகம் ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறைரூபா 4,090,327 தொகை ஆகும். அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 4,318,744 தொகையான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 6,474,600 தொகையால் அரசாங்க மானியங்கள் அதிகரித்தமையே இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கை இல 34(ii) இல் குறிப்பிடப்பட்ட இணைந்த படி கொடுப்பனவு செலுத்தப்படவேண்டும். இருப்பினும் அந்த சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கு மாறாக இணைந்த கொடுப்பனவு உள்ளடக்கிய பிரயாண செலவு ரூபா 532,051 மீளாய்வாண்டில் கல்லூரியினால் அலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இணைந்த படி உள்ளடக்கிய பிரயாண செலவுகளில் தற்பொழுது கருத்தில் எடுக்கப்பட்டு செலுத்தப்படுகிறது. | முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கைக்கு இணைந்த படிகள் இணங்கப்பட வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடந்த 04 வருடகாலப்பகுதியல் கல்லூரியில் கல்வி கற்ற 946 மாணவர்களில் 122 மாணவர்கள் அல்லது 12.8 சதவீதமானோர் கற்கைநெறியினை பூர்த்தி செய்யாது கல்லூரியிலிருந்து வெளியேறியிருந்தார்கள். | நாடு பூராகவும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் வெளியேறுவது பொதுவான பிரச்சினையாக இருக்கின்றது. | வெளியேறுகின்ற விகிதத்தை குறைப்பதற்கு நடவடிகடகை எடுக்கப்படவேண்டும். |

### 3.3 வாகன ஒட்ட முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ)** கல்லூரியினுடைய ஒரு ஒதுக்கப்பட்ட வாகனம் 2018 நவம்பர் 03 இல் விபத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தது. நிதி ஒழுங்கு விதி 104 இற்கு இணங்க விபத்து தொடர்பாக இறுதி அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சேதத்தின் இழப்பு அதிகமாக இருந்ததால் திருத்துவதற்கான பொறுப்பை அமைச்சு எடுத்திருந்தது. அமைச்சால் எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் திருத்த வேலைகள் மற்றும் இறுதி அறிக்கை விபரங்கள் நாங்கள் அமைச்சிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. நாங்கள் அமைச்சிடமிருந்து தொடர் முன்னேற்றத்தை நெருக்கமாக பின்தொடர்கின்றோம். | நிதி ஒழுங்கு விதி 104 இற்கு இணங்க இழப்பு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | வாகன ஓட்ட அட்டவணைகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br>- 45,253 கிலோமீற்றர் ஓட்டம் தொடர்பில் வாகன ஓட்ட அட்டவணையில் எரிபொருள் கட்டளை இலக்கம், திகதிகள் மற்றும் எரிபொருள் பற்றுச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்டிருந்திருக்கவில்லை<br>- 436 கிலோமீற்றர் ஓட்டம் தொடர்பில் வாகன பயன் படுத்திய நோக்கங்கள் வாகன ஓட்ட அட்டவணைகளில்குறிப்பிடப்பட்டிருந்திருக்கவில்லை.<br>- 96 கிலோமீற்றர் பயணம் செய்தமைக்காக வாகனம் பயன்படுத்திய அலுவலர்களினால் அவர்களது கையொப்பம் ஓட்ட அட்டவணைகளில் இடப்படவில்லை.<br>- ஒரு வாகன நகர்வு பதிவேடு பராமரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை.<br>- வாகன செயற்திறன் மாதாந்த சுருக்கக்கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்திருக்கவில்லை | தற்பொழுது எரிபொருள் கட்டளை மற்றும் வாகன ஓட்ட அட்டவணைகளில் சரியான கவனம் செலுத்தப்படுகின்றது. பயணங்களின் நோக்கங்கள் மற்றும் எரிபொருள் விபரங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தாலும் ஏனைய விபரங்கள் சாரதியால் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | 2015 ஆம் ஆண்டிலிருந்து 02 மோட்டார் வாகனங்கள் கல்லூரியினால் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அமைச்சினூடாக அந்த மோட்டார் வாகனங்களுடைய உரிமையினை எடுப்பதற்கு கல்லூரியினால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | ஏனைய வாகனம் போன்று டபிள்யூ பி பிஎப் - 6011 இதற்கான உரிமை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கல்லூரிக்கு மோட்டார் வாகனங்களை வைத்திருப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல 01/2014 இன் படி காலாண்டு இலக்குகளை கொண்ட வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் அந்த இலக்குகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களின் விபரம் என்பன கல்லூரியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னேற்றத்திற்கான அதிக முன்னுரிமை பகுதிகளை கருத்திலேடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். | கல்லூரியினுடைய இலக்குகள் மற்றும் செயற்பாடுகள் குறிப்பிட்டு ஒரு செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக்குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல பீஈடி/12 இன் பிரிவு 7.4.1 இன் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுவொன்றை நிறுவுதல் கவனத்தில் எடுக்கப்படும். | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதுக்குஇணங்க கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியமானது. |

### 4.3 ஆண்டறிக்கையினை வெளியிடுதல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்லூயினுடைய 2016 ஆம் தொடக்கம் 2018 ஆம் வரையான காலப்பகுதிக்கான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்திருக்கவில்லை. | ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் வெளியீட்டுவதற்கு கவனத்தில் எடுக்கப்படும். | ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். |

### 4.4 பாதீட்டு கட்டுப்பாட்டு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான 04 விடயங்களுடன் தொடர்புபட்ட உண்மையான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் 12 சதவீதம் தொடக்கம் 72 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தது. இதனால் முகாமைத்துவ கட்டுப்பாட்டினுடைய ஒரு வினைத்திறனான கருவியாக பாதீடு தயாரிக்கப்பட்டிருந்திருக்காமையை இது குறிக்கின்றது.<br>வருடாந்த பாதீட்டில் ஏற்பாடுகளின்றி ஒரு வாகன தரிப்பிடம் அமைப்பதற்காகவும் கணணி கொள்வனவுக்காகவும் மீளாய்வாண்டில் மொத்தமாக ரூபா 541,786 செலவு செய்யப்பட்டிருந்தது. | நாங்கள் இதனை கருத்திலெடுத்து எதிர் காலத்தில் அதிக யதார்த்தமாகவும் சரியாகவும் நாங்கள் தயாரிப்பதையும் உறுதிப்படுத்துகின்றோம். | நம்பகரமான தகவலின் மீது கல்லூயினுடைய தேவைகளை கருத்தில்கொண்டு பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும். |

### 4.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒவ்வொரு பொது நிறுவனமும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான 2030 நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க செயற்பட வேண்டும் என்பதுடன் 2017 ஒக்டோபர் 03 திகதிய 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் அனைத்து பொது நிறுவனங்களும் மேற்கூறிய விடயத்தை சுற்றறிக்கைகள் மூலம் அறிந்திருந்தன. அதன்படி, அந்தந்த நிறுவனத்தின் கண்காணிப்பிற்குள் வரும் செயற்பாடுகள் தொடர்பாக அது எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து அனைத்து பொது நிறுவனங்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். ஆயினும், மேற்கூறிய விடயம் குறித்து கல்லூரி விழிப்புடன் இல்லாமையால் இலக்குகள் நோக்கங்களுடன் தொடர்புபட்ட அதனது செயற்பாடுகளும் அவ் இலக்குகளின் அடைதலை அளவீடு செய்வதற்கு தேவையான குறிகாட்டிகளும் கல்லூரியினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | 2017 ஒக்டோபர் 03 திகதிய 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்ட சுற்றறிக்கையை பயன்படுத்தி ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறித்த விழிப்புணர்வை ஊழியர்களிடையே ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையப்பட வேண்டும். |